பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 695 **நாள்: 19.11.2026**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கடந்த 12.11.2026 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான அனைத்து வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் 21.11.2026 (சனிக்கிழமை), 22.11.2026 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 29.11.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கடந்த 12.11.2026 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் முகவரி மாற்றம் ஆகிய பணிகளுக்கான சிறப்பு முகாம்கள் சென்னை தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற உள்ளன. எதிர்வரும் 21.11.2026 (சனிக்கிழமை), 22.11.2026 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 29.11.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை இம்முகாம்கள் நடைபெறும்.

எனவே வாக்காளர் பட்டியலில், இடம் பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள், புதிதாகப் பதிவு செய்யவுள்ள இளம் மற்றும் முதல் முறை வாக்காளர்கள், மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் செய்ய விரும்பும் பொதுமக்கள் உரிய ஆவணங்களுடன் தங்கள் பகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் இந்த சிறப்பு முகாம்களை அணுகிப் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்

பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

PR.No. 695 **Date: 19.11.2026**

As per the instructions of the Election Commission of India, the draft electoral roll was published on 12.11.2026. Following this, special camps for the inclusion, deletion, correction, and change of address in the electoral roll are scheduled to be held across all polling station locations in the 16 Assembly Constituencies under the Chennai Election District. These camps will take place on 21.11.2026 (Saturday), 22.11.2026 (Sunday), and 29.11.2026 (Sunday) from 10:00 AM to 5:00 PM.

Therefore, eligible voters whose names are not included in the electoral roll, young and first-time voters looking to register newly, and members of the public wishing to make corrections are requested to visit the special camps at their respective polling stations with the required documents and make use of this opportunity.

Issued by: Joint Director/Public Relations Officer.

Greater Chennai Corporation